இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 03-09-2024

# மணிப்பூரும் கொல்கத்தாவும்!

**கொ**ல்கத்தாவில் நடந்துள்ள கொடூரம், எத்தகைய மோசமான சமூகத்தில் வாழ்கிறோம் என்பதை நினைத்து தலைகுனிய வைக்கிறது!

கொல்கத்தா ஆர்.ஜி.கர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணியில் இருந்த ஒரு முதுநிலை பயிற்சி மருத்துவர் ஆகஸ்ட் 9 ஆம் நாள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார். உயிரற்ற உடலாக ஆக்கப்பட்டார். பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதற்கான தடயங்கள் அவரது உடலிலேயே இருந்தது. அந்த மருத்துவமனை காவல் பணியாளர்களுள் ஒருவரான சஞ்சய் ராய் என்பவர் கைது செய்யப்பட்டார். கொல்கத்தா உயர்நீதி மன்ற உத்தரவை அடுத்து இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. நாடு முழுவதும் மருத்துவர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் போராட்டம் நடத்தினார்கள்.

இந்த வழக்கை தானாக முன்வந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வு விசாரணை நடத்தியது. **“பெண் மருத்துவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் கொடூரமானது. இந்த சம்பவம் நாடு முழுவதும் மருத்துவர்களின் பாதுகாப்பு தொடர்பான அமைப்பு ரீதியான பிரச்சினையை எழுப்புகிறது. பெண்கள் வேலைக்குச் செல்ல முடியாவிட்டால், அவர்கள் பணிபுரி வதற்கு ஏற்ற பாதுகாப்பான சூழல் இல்லாவிட்டால் அவர்களுக்கு சம உரிமை மறுக்கப்படுகிறது என்றே பொருள்”** என்று நீதிபதிகள் குறிப்பிட்டார்கள்.

மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விதிமுறைகளை வகுக்க 10 பேர் கொண்ட தேசிய பணிக்குழுவையும் உச்சநீதிமன்றம் அமைத்துள்ளது. வழக்குப் பதிவு செய்வதில் தாமதம் செய்ததாக மம்தா பானர்ஜி தலைமையிலான மேற்கு வங்க அரசுக்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. “பெண் மருத்துவர் கொல்லப்பட்ட சம்பவத்தை தற்கொலை போல மருத்துவக் கல்லூரி முதல்வர் சித்தரிக்க முயன்றுள்ளார். அந்த சம்பவம் நடைபெற்ற பின்னர் கல்லூரி முதல்வர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். அவரது செயல்பாடுகள் விசாரிக்கப்பட்டு வரும் நிலையில், அவருக்கு எப்படி மற்றொரு மருத்துவமனையில் பொறுப்பு வழங்கப்பட்டது?” என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது.

**சி.பி.ஐ. விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தருவதாகவும், என்னிடம் அதிகாரம் இருந்தால் ஒரு வாரத்தில் குற்றவாளிக்கு தண்டனை வழங்குவேன் என்றும், பத்து நாளில் மரண தண்டனை வழங்கும் வகையில் சட்டம் கொண்டு வரப் போவதாகவும் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி சொல்லி இருக்கிறார். ‘போராடும் மருத்துவர்களுக்கு நாங்கள் ஆதரவாக இருக்கிறோம். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது’ என்றும் முதலமைச்சர் மம்தா சொல்லி இருக்கிறார்.**

இந்த கொடூரத்தில் நடக்கும் கொடூரம் பா.ஜ.க. நடத்தும் அரசியல்தான். பா.ஜ.க. மேற்கு வங்கத்தில் முழு அடைப்பு போராட்டத்தை நடத்தி இருக்கிறது. மம்தாவை முதலமைச்சர் பதவியில் இருந்து விலகச் சொல்லி போராட்டம் நடத்தி இருக்கிறார்கள். குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கொல்கத்தா சம்பவத்தை கண்டித்துள்ளார்.

“கொல்கத்தாவில் ஒரு மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி கொலை செய்யப்பட்டது தேசத்தை உலுக்கி இருக்கிறது. இதைக் கேட்டதும் மிகவும் அதிர்ச்சியும் சோகமும் அடைந்தேன். இது ஒரு சம்பவம் அல்ல, பெண்களுக்கு எதிரான தொடர் குற்றங்களின் ஒரு பாகம் இது. நாகரிகம் அடைந்த எந்த சமூகமும் இத்தகைய கொடூரத்தை அனுமதியாது. தேசம் சீற்றம் கொள்ளும், நானும் சீற்றம் கொள்கிறேன்..” என்று கோபம் காட்டி இருக்கிறார் குடியரசுத் தலைவர். அவருக்கு மணிப்பூர் மாநிலம் மறந்து போயிருக்காது.

**“தவறு இழைக்கும் யாரும் தப்பி விடக்கூடாது. பெண்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை தர வேண்டும். நாட்டில் எந்த மாநிலமாக இருந்தாலும், மகள்களின் வலி மற்றும் கோபத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. பெண்களுக்கு எதிரான குற்றத்தில் இருந்து யாரும் தப்பி விடக்கூடாது. போலீஸ் உட்பட யாரிடம் அலட்சியம் இருந்தாலும் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று பேசி இருப்பவர் யார் தெரியுமா? பிரதமர் நரேந்திர மோடி அவர்கள்.**

**மணிப்பூர் கொடூரத்தை அவர் நாக்கு மறந்திருக்கலாம். ஆனால் அவரது மனச்சாட்சி மறந்திருக்காது. உலகம் முழுக்க சுற்றி வரும் மோடி, இதுவரை மணிப்பூர் செல்லவில்லை. அவரது மனவரைபடத்தில் இருந்து துடைத்தெறியப்பட்ட மாநிலமாக மணிப்பூர் இருக்கிறது.**

மணிப்பூரில் என்ன நடந்தது? சி.பி.ஐ. குற்றப்பத்திரிக்கையே சொல்கிறது...

“அந்த இரண்டு பெண்களை ஆயுதம் தாங்கிய ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விரட்டி வந்தார்கள். அந்த பெண்கள் இருவரும் தப்பித்து காட்டுக்குள் ஓடினார்கள். சாலையோரத்தில் ஒரு காவல்துறை வாகனம் நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அதற்குள் ஓடி ஒளிந்து கொண்டார்கள். அந்த வாகனத்தில் ஓட்டுநர் இருந்தார். காவல் துறை அதிகாரிகள் இருவர் உள்ளே உட்கார்ந்து இருந்தார்கள். நான்கைந்து காவலர்கள் அந்த வாகனத்துக்கு அருகில் நின்று கொண்டு இருந்தார்கள்.

அந்த இரண்டு பெண்களோடு, ஆண் ஒருவரும் ஓடி வந்தார். தங்களை பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு போய்விடுங்கள் என்று அந்த ஆண், காவலர்களிடம் கெஞ்சினார். ஆனால் காவலர்கள், ‘இந்த வாகனத்தில் சாவி இல்லை’ என்று சொல்லி விட்டார்கள். அந்தப் பெண்களைக் காப்பாற்ற காவலர்கள் மறுத்துவிட்டனர்.

அதற்குள் கலவரக்காரர்கள் அந்த வாகனத்தை சூழ்ந்து விட்டார்கள். உடனடியாக காவலர்கள் அனைவரும் ஓடிவிட்டார்கள். வாகனத்துக்குள் இருந்த இரண்டு பெண்களையும் கலவரக்காரர்கள் வெளியில் இழுத்து வந்தார்கள். நிர்வாணப்படுத்தினார்கள். ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். பாலியல் வன்கொடுமை செய்தார்கள்” - என்கிறது சி.பி.ஐ. தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கை. என்ன நடவடிக்கை எடுத்தது மணிப்பூர் பா.ஜ.க. அரசு?

‘இது போல நிறைய சம்பவம் நடந்துள்ளது’ என்று சொன்னார் மணிப்பூர் மாநில முதலமைச்சர் பிரேன்சிங். அவர் மீது நடவடிக்கை எடுத்தாரா பிரதமர் மோடி? பா.ஜ.க.வைச் சேர்ந்த 9 எம்.எல்.ஏ.க்கள் டெல்லி வந்து உள்துறை அமைச்சரிடம் முதலமைச்சர் பற்றி புகார் அளித்தார்களே. அதன்பிறகாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இல்லை!

**கொல்கத்தாவில் நடந்தால் மட்டும் கண்ணீர் நாடகங்களா?**

●●



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 01.09.2024 அன்று சென்னையில் நடைபெற்ற ஃபார்முலா 4 இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேசிங் லீக் (Formula 4 Indian Championship and Indian Racing League) போட்டிகளில், ஃபார்முலா 4 இந்தியன் சாம்பியன்ஷிப் பிரிவில் இரண்டாம் சுற்றில், முதல் இடம் பெற்ற தென் ஆப்ரிக்கா வீரர் அகில் அலிபாய் (பிளாக் ப்ர்ட்ஸ் ஹைதிரபாத்), இரண்டாம் இடம் பெற்ற இந்திய வீரர் திவி நந்தன் (அகமதாபாத் அபக்ஸ் ரேசர்ஸ்), மூன்றாம் இடம் பெற்ற இந்திய வீரர் ஜெடன் பரியட் (பெங்களூர் ஸ்பீட்ஸ்டர்ஸ்) ஆகியோருக்கு பரிசுக் கோப்பை வழங்கி பாராட்டுத் தெரிவித்தார்.

## ‘பார்முலா 4 சென்னை’ கார் பந்தயம் மாபெரும் வெற்றி!

# இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரம் தமிழ்நாடு!

## பெருமையைத் தக்க வைப்போம் – என முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, செப். 3 -**

**“ ‘பார்முலா 4 சென்னை’ கார் பந்தயம் மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரம் தமிழ்நாடு என்ற பெருமையைத் தக்க வைப்போம்” என முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதிபடக் கூறியுள்ளார்.**

தெற்காசியாவிலேயே முதன் முறையாக சென்னையில் பார்முலா 4 கார் பந்தம் நடந்ததால் இப்போட்டியைக் காண கடந்த 2 நாட்களாக ஆர்வத்துடன் ரசிகர்கள் திரண்டு வந்திருந்தனர்.

முதல் நாளான ஆக. 31 அன்று, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போட்டியை கொடியசைத்து முறைப்படி தொடங்கி வைத்தார்.

நேற்று முன்தினம் காலை 10.15க்கே எல்லா அணிகளும் பயிற்சி செய்ய அனுமதிக்கப்பட்டன. முன்னதாக எப்ஐஏ, எப்எம் எஸ்சிஐ நிர்வாகிகள் பந்தய பாதையின் தன்மையையும், பாதுகாப்பையும் உறுதி செய்தனர்.

ஜேகே எப்எல்ஜிபி - 4, ஐஆர் எல், பார்முலா 4 பந்தயங்கள் தலா இரண்டு ரேஸ்களாக நடைபெற்றன. ஜேகே எப்எல் ஜிபி - 4 பந்தயத்தில் தலா 24 கார்கள் இரண்டு 2 ரேஸ்களில் பங்கேற்றன. மற்ற 2 பிரிவுகளில் அணிக்கு தலா 2 கார்கள் என மொத்தம் தலா 12 கார்கள் பந்தயத்தில் பங்கேற்றன.

ஒவ்வொரு பந்தயத்தின் முடிவிலும் முதல் மூன்று இடங்கள் பிடித்தவர்களுக்கு பரிசுக் கேடயங்கள் வழங்கப்பட்டன. அணிகளின் பொறியாளர்களுக்கும் கேடயங்கள் வழங்கப்பட்டன.

முதல் மூன்று பந்தயங்கள் மாலைக்குள் முடிவடைய கடைசி 3 பந்தயங்கள் ஒளி வெள்ளத்தில் இரவில் நடைபெற்றன.

இந்தியன் எப்4 பிரிவில், ஆஸ்திரேலியாவின் ஹக் பார்ட்டர் (காட்ஸ்பீடு கொச்சி அணி) சாம்பியன் பட்டம் வென்றார். பெங்கால் டைகர்ஸ் அணியின் ருஹான் ஆல்வா 2வது இடமும், பெங்களூர் ஸ்பீட்ஸ்டர்ஸ் அணி வீரர் அபய் மோகன் 3வது இடமும் பிடித்தனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரிசுக் கோப்பைகளை வழங்கி பாராட்டினார்.

இந்நிலையில் 'பார்முலா4 சென்னை' கார் பந்தயத்தை மாபெரும் வெற்றியடையச் செய்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சேர்ந்த அனைவரையும் பாராட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளார்.

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பாராட்டு!

அது வருமாறு:-

**'பார்முலா4 சென்னை' கார் பந்தயத்தை மாபெரும் வெற்றியடையச் செய்த உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சேர்ந்த அனைவருக்கும் எனது பாராட்டுகள்.**

**செஸ் ஒலிம்பியாட், சென்னை ஓபன் 2023 டென்னிஸ் தொடர், ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி 2023, பன்னாட்டு அலைச் சறுக்குப் போட்டி 2023, ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023 மற்றும் கேலோ இந்தியா 2023 ஆகியவற்றின் வெற்றிகளைத் தொடர்ந்து, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக்கான சிறப்பான வளர்ச்சிப் பாதையை அமைத்து வருகிறது.**

**உலகத் தரத்திலான வசதிகள், உத்தி மிகுந்த முதலீடுகள் ஆகியவற்றின் வாயிலாக நாம் வெறுமனே தொடர்களை மட்டும் நடத்திக்காட்டவில்லை, இந்திய விளையாட்டுத்துறை வளர்ச்சியின் முன்னோடியாக விளங்கி வருகிறோம். அதனால்தான் இந்திய ஒலிம்பிக் அணியிலும் தமிழ்நாடு தனிச்சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.**

**எல்லைகளைத் தொடர்ந்து விரிவடையச் செய்வோம், ‘இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரம் தமிழ்நாடு’ எனும் பெருமையை உறுதியாகத் தக்க வைப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# வேடசந்தூர் காந்திராஜன் எம்.எல்.ஏ. இல்ல விழா!

## அமைச்சர்கள் இ.பெரியசாமி – அர.சக்கரபாணி வாழ்த்தினர்!

திண்டுக்கல், செப். 3 -

வேடசந்தூர் சட்ட மன்ற உறுப்பினர் - தலைமைச் செயற்குழு உறுப்பினர் காந்திராஜன் இல்ல விழா திண்டுக்கல்லில் நடைபெற்றது. இதில் அமைச்சர்கள் இ.பெரியசாமி, அர.சக்கரபாணி ஆகியோர் பங்கேற்று வாழ்த்தினர்.

வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் - மனைவி பஞ்சவர்ணம். இவர்களின் மகன் சிவக்குமார் - அனிதா ஆகியோரின் மகள் அக்சதா சிவக்குமாரின் பூப்புனித நீராட்டு விழா திண்டுக்கல்லில் நடைபெற்றது.

விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர், கழக துணை பொதுச் செயலாளர் இ.பெரியசாமி, உணவுத்துறை அமைச்சர், மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் ஆகியோர் பங்கேற்று அக்சதா சிவக்குமாரை வாழ்த்தினர்.

வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் அமைச்சர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தார்.

கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அவருடைய மனைவி மெர்சி செந்தில்குமார், திண்டுக்கல் எம்.பி. சச்சிதானந்தம், கரூர் எம்.பி. ஜோதிமணி மற்றும் முக்கிய பிரமுகர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர், பூங்கொடி, மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் பிரதீப், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், தி.மு.க. மாவட்டப் பொருளாளர் விஜயன், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் ஜெயன், ஒன்றியச் செயலாளர் வெள்ளிமலை, திண்டுக்கல் ஒன்றியக் குழுத் தலைவர் ராஜா, காவிரி எலக்ட்ரிக்கல்ஸ் உரிமையாளர்கள் விஜயன், கவுதம், வி.எம்.எஸ்.ஐ. கன்ஸ்ட்ரக்சன் உரிமையாளர் கார்த்திகேயன், வேடசந்தூர் ஒன்றியப் பெருந்தலைவர் சௌடேஸ்வரி கோவிந்தன், மாவட்ட இளைஞரணி அணி துணை அமைப்பாளர் ரவி சங்கர், வேடசந்தூர் பேரூர்ச் செயலாளர் கார்த்திகேயன், மாவட்ட வர்த்தகர் அணி துணைச் செயலாளர் கார்த்திகேயன் உட்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் சார்பில் நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் காந்திராஜன் – பஞ்சவர்ணம் இல்ல விழாவில், பெயர்த்தி அக்சதா சிவக்குமாரை கழகத் துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் இ.பெரியசாமி, அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் இபெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் நேரில் சென்று வாழ்த்தினர்.